தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1974 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெளியிடக் குறிப்பிட்ட வினாக்கள்.

Course in Television.

* 371 *Q.*—THIRU N. DENNIS: }
THIRU N. K. PALANISAMY: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce a course in Television in the Film Institute at Adyar in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இதுபற்றிய விவரங்கள் ஆய்வில் உள்ளன.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, டெலிவிஷன் மாடர்ன் மெதட் ஆப் டெவலப்மெண்ட்டாக இருப்பதால், டெலிவிஷன்பற்றிக் கற்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே இந்தத் துறை பற்றிய பலவேறு பயிற்சி முறைகள் நடைபெற்று வருகின்றன. இப்பொழுது புதிதாக டெலிவிஷன் பற்றிய பாட முறையை எடுத்துக்கொள்வதா, இல்லையா என்பதைப்பற்றி யோசித்து வருகிறது. அதற்கென்று இருக்கின்ற குழு அதுபற்றி ஆராய்ந்து அடுத்த கூட்டத்தில் அதுபற்றி முடிவு எடுக்கலாம் என்று ஒத்திவைத்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இப்பொழுது இந்த டெலிவிஷன் ஜனங்களுக்கு மிகவும் அத்தியாவசியமான பொருளைப் போல் ஆகிவிட்டதன் காரணமாக, எங்கு பார்த்தாலும் ரேடியோ அண்டு டெலிவிஷன் என்றுதான் சொல்லுகிறார்கள். ஆகவே, இதைச் சரியான முறையில் கற்பதற்கு நம் மாநிலத்திலிருந்து தகுந்த என்ஜினியர்களை டில்லிக்கு அனுப்பி அங்கே அவர்கள் சரியான முறையில் கற்றறிந்து இங்கே மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கக் கூடிய முறையில் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டெலிவிஷன் பாட முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது கற்றுத்தரப்பட வேண்டுமென்று பிறகு மேற்கொள்ளப்படுமானால் அந்தப் பயிற்சி அளிப்பவர்கள் எவ்வளவு திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதிலே அரசு தனக்குள்ள அக்கறையை மறந்துவிடாமல், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையையும் மனதில் கொண்டு அவ்வாறு செயல்படும்.

திரு. கு காமாட்சி : இந்தத் திரைப்படக் கல்லூரியில் எத்தனை பேர் இப்பொழுது பயின்று கொண்டிருக்கின்றார்கள் ? அவர்களுக்கு எந்த எந்த முறையிலே பயிற்சி அளிக்கப்படுகிறது ? நடிப்பு மட்டும்தான் கற்றுக் கொடுக்கப்படுகிறதா ? அல்லது கேமிராவை இயக்குவது என்கிற முறையெல்லாம் சொல்லிக்கொடுக்கப்படுகிறதா ? அதில் பயிலுகின்ற மாணவ மாணவிகள் இந்த மாநிலத்தை மட்டும் சேர்ந்தவர்களா ? மற்ற மாநிலங்களிலிருந்து வருகிறவர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு ஐந்தாறு கேள்விகளைச் சேர்த்துக் கேட்டிருக்கிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுடைய மொத்த எண்ணிக்கை 107 பேர். நடிப்பு மாத்திரம் அல்லாமல் திரைப்படப் பிடிப்பில் 36 பேரும், ஒலிப் பதிவு, ஒளிப் பதிவு, பொறியியலில் 24 பேரும், திரைப்படத் தொகுப்பில் 7 பேரும், திரைப்பட முறை வைப்பில் (ப்ரோஸஸிங்) 14 பேரும், நடிப்பில் 13 பேரும், டைரக்ஷன் திரைக் கதை எழுதுதலில் 13 பேரும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தக் கல்லூரியில் பயிற்சிக்காக இடம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ வகாப் : சென்னையில் கட்டப்பட்டு வருகின்ற டெலிவிஷன் நிலையம் குறிப்பிட்ட காலத்தில் முடியாது இன்னும் ஓராண்டு ஈராண்டுகள் தாமதம் ஆகும் என்று கூறப்படுகிறதே அதற்கான காரணம் என்ன என்பதை நமது அரசு ஆராய்ந்து உடனடியாக செயல்பட முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டெலிவிஷன் நிலையத்தைத் துரிதமாக முடித்திடவேண்டுமென்று 7—1—1974-இல் நான் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு 19—1—1974-இல் பிரதமர் பதில் எழுதி இருக்கிறார். சென்னை தொலைக்காட்சி நிலையத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதுகுறித்த வேலைகள் விரைவில் முடிக்கப்பெறுவதற்கு எல்லாவிதமான ஆக்கபூர்வமான காரியங்களும் மேற்கொள்ளப்படுகின்றன, சில தொழில் நுட்பப் பிரச்சினை காரணமாகத்தான் தாமதம் ஏற்படுகிறது என்று பிரதமர் அவர்கள் பதில் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, விரைவில் அது முடியும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் டெலிவிஷன் நடைமுறைக்கு வந்தபின்னர், எல்லோருடைய வீட்டிலும் ரேடியோ இருப்பதைப்போல எல்லோருடைய வீட்டிலும் டெலிவிஷன் இருக்க வேண்டும் என்ற சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தயாரிக்க முன்வருமா ?

1974 மார்ச் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லோருடைய வீட்டிலும் இப்பொழுது ரேடியோ எந்த அடிப்படையில் இருக்கிறதோ அந்த அடிப்படையில் எல்லோருடைய வீட்டிலும் டெலிவிஷன் இருக்கும் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு).

சிறுவர்களுக்கான திரைப்படங்கள்.

* 372 வினா— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுவர்களுக்கென திரைப்படங்களை தமிழ்நாடு அரசு தயாரிக்க உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு சார்பாக தற்போது எந்த எந்த வகையான திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின பல்வேறு துறைகளின் சார்பாக பல விளக்கப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. "கல்லும் சொல்லாதோ கவி" என்ற தலைப்பில் சிற்பம் பற்றிய படம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது. உயர் விளைச்சல் ரகங்கள், பயிர் பாதுகாப்பு, உரங்கள், நெடுங்கடல் மேலே, குடும்பக் கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தீ அணைப்பு, சீரணி, நெற்பயிர் வேளாண்மை, வாழ்க்கை வளம் பெற, மனம் ஒரு குரங்கு, அன்னையர் இருவர், இரண்டு வீடு, வளமான வாழ்வு, எந்த நாளும் காப்போம், பருத்தி வேளாண்மை, விசை தெளிப்பூச்சு பராமரிப்பு கிராம முன்னேற்றம், சுற்றுலா, விவசாயப் பயிற்சி விற்பனைக்கூடம் பரிசுச் சீட்டு, ரூரல் டெவலப்மெண்ட் என்று இப்படிப்பட்ட தலைப்புகளில் தமிழ்நாடு அரசில் உள்ள பல்வேறு இலாகாக்களின் சார்பாகப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. எம். சுரேந்திரன் : திரைப்படங்கள் கல்வி போதிப்பிலே சிறந்த பணியைச் செய்ய முடியும் என்று பல அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் சிறுவர்களுக்கென திரைப்படங்களைத் தயாரிப்பது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிற நோக்கில் இந்த அரசாங்கம் இதுசம்பந்தமாக வருங்காலத்தில் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ள, சிறுவர்களுக்கு அறிவுரை போதிக்கும் படங்கள் ஆங்காங்கே இருந்து வரவழைக்கப்பட்டு சிறுவர்களுக்கு போட்டுக் காட்டப்படுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.